**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI

| | | |
|---|---|---|
| Case Number | : | S.C.No. 113/2021 |
| Deposition Of Witness for | : | PW 1 |
| Name | : | **திருமதி. பாண்டிசெல்வி** |
| Father's/Husband's Name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **27th June 2024.**

(எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

நான் திருப்பத்தூரில் இசைவெள்ளாலர் தெருவில்குடியிருந்து வருகிறேன். எனது கணவர் காளிதாஸ் பெயிண்டர்ராக வேலைசெய்து வருகிறார். ஆஜர் எதிரியை

தெரியும். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் 2 வருடமாக பழக்கம் இருந்து வந்தது. அதன் பிறகு நான் அவரது தொடர்பினை துண்டித்துக் கொண்டேன். 11.09.2019 ல் பிள்ளையார்பட்டிக்கு நானும் எனது கணவரும் சென்று திருப்பத்தூரில் உள்ள வீட்டிற்கு வந்தோம். இரவு சுமார் 7.00 மணிக்கு நான் என் வீட்டிலிருந்த போது எதிரி வந்து என்னை கணவரோடு ஏன் சேர்ந்து திருமணத்திற்கு சென்றாய் என்று கூறி தகராறு செய்தார் அப்போது வெளியில் சென்ற என் வீட்டுக்காரர் வந்தார் என்னோடு வாக்குவாத்தில் ஈடுபட்ட எதிரியிடம் ஏன் என் மனைவியிடம் தகராறு செய்கிறாய் என்று கேட்டார். அதற்கு எதிரியும் அசிங்கமான தகாத வார்த்தைகளால் திட்டி அருகில் கிடந்த விறகு கட்டையை எடுத்து என் கணவரின் தலையில் அடித்து நீ உயிரோடு இருந்தால் தானே உன்னை கொன்று விட்டால் உன் மனைவியுடன் எனக்கு இருக்கும் தொந்தரவு கிடையாது என்றும் அதற்கு காரணமான உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறி விறகு கட்டையால் தாக்கினார் அதனை தடுத்த என்னையும் விறகு கட்டையால் தலையின் நெற்றி பகுதியில் அடித்து காயப்படுத்தினார். அப்பொழுது சத்தம் கேட்டு எதிர் வீட்டு கார்மேகம் என்பவர் சத்தம் போட்டவுடன் எதிரி ஓடிவிட்டார். நானும் எனது கணவரை ஆட்டோ மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தேன் அப்போது எனது கணவர் பேசமுடியாமல் மயக்கத்தில் இருந்ததால் அப்போது நடந்த விபரத்தினை கூறி புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1. சம்பவம் எங்கள் வீட்டிற்கு முன்பாக பொதுப்பாதையில் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம்

காட்டப்படும் கம்பால் தான் எதிரி என்னையும் என் கணவரையும் அடித்தார்  அந்த கம்பு

சா.பொ 1.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2024.06.27 17:24:13 +0530